அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 141 / 2017
தேதி : 22.11.2017

### பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபம் உழைப்பிற்கு கிடைத்த உண்மையான அங்கீகாரம்.

தூத்துக்குடியில் தமிழக அரசு சார்பாக நடத்தப்பட்ட, எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் பத்திரிக்கை, கல்வி, தொழில், விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியவரும், தமிழகத்தின் பெருமையை உலகளவில் கொண்டுசென்றவருமான பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு திருசெந்தூரில் அரசு சார்பாக மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அறிவிப்பு அவருடைய உழைப்பிற்கு கிடைத்த உண்மையான பரிசாகவும், தந்தையின் உழைப்பால் உயர்ந்த நிறுவனத்தை, தனது புத்திக் கூர்மையினால் மேலும் உயர்த்தி பல சாதனைகள் படைத்துள்ள மனித நேயமிக்கவருக்கு கிடைத்த அங்கீகாரமாகவே கருதுகிறேன்.

பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் மீண்டும் ஒருமுறை நன்றியை, பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com